# 26 சரியைத் தொண்டுகள்

நாம் மனிதப் பிறவி எய்தியதன் நோக்கம் இறைவன் நமக்குக் கொடுத்தருளிய உடம்பு, அறிகருவிகள், உலகம், நுகர்வுப் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டு இறைபணி நின்று முத்தி அடைவதேயாகும். முத்தியடைவதற்கு மெய்யுணர்வாகிய ஞானத்தைப் பெறுதல் வேண்டும். அந்த ஞானத்தைப் பெறுவதற்குச் சாதனமாகச் சரியை, கிரியை, யோகம் என்பவற்றை சைவாகமங்கள் எடுத்துக் கூறுகின்றன.

சரியை சைவ நாற்பாதங்களில் முதலாவது படியாகக் கூறப்படுகின்றது. அன்பின் துணையோடு உடம்பினால் செய்யும் இறைப்பணிகள் அனைத்து சரியை நெறியாகும். இலகுவில் செய்யக்கூடிய ஆரம்ப முயற்சியான இதற்கு தூய தெய்வ பக்தியில் இறையம்சமும் துணைநிற்க வேண்டும். சரியைத் தொண்டு புரிபவர்கள் தாசமார்க்கத்தைக் கைக்கொள்வார். தாசமார்க்கம் பற்றி திருமந்திரம் பின்வருமாறு கூறுகின்றது.

''எளிய நல் தீபம் இடல் மலர் கொய்தல்
அளியின் மெழுகல் அதுர்த்தல் வாழ்த்தல்
பளிபணி பற்றல் பன்மஞ்சனம் ஆதி
தளி தொழில் செய்வது தான் தாச மார்க்கமே'' (திருமந்திரம்)

சரியை சார்ந்த சமயப்பணிகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் சில:

- ★ ஆலயங்களில் இறைவனை வழிபடல்
- ★ வழிபாட்டின் பொருட்டுத் திருக்கோயிலைக் கூட்டுதல்
- ★ மெழுகுதல், கழுவுதல்
- ★ திருவிளக்கு ஏற்றல்
- ★ திருநந்தவனம் அமைத்தல்
- ★ பூ எடுத்தல்
- ★ பூமாலை தொடுத்தல்
- ★ பூசைத் திரவியம் கொடுத்தல்
- ★ பூசைக்குரிய பொருட்களைத் துலக்கிச் சுத்தம் செய்தல்
- ★ தீவர்த்தி, குடை, கொடி, ஆலவட்டம் பிடித்தல்
- ★ வாகனம் துடைத்தல், கழுவுதல்
- ★ இறைவன் புகழ் பாடுதல்

சிவனடியார்களைக் கண்டால் அவர்களை வணங்கி அவர்களுக்குச் சேவை செய்தல், உழவாரப்பணி செய்தல், பழங்கோயில்களை வேண்டும் அளவில் புதுப்பித்தல் புராணபடனம் செய்தல், கேட்டல், புராணக் கதை படித்தல், யாத்திரை செய்தல்.

இவற்றுள் பின்வருவனவற்றைச் சிறப்பாக நோக்குவோம்

1. ஆலயத்தைத் துப்புரவு செய்தல்
2. தலவிருட்சம் வைத்தல்
3. நந்தவனம் அமைத்துப் பேணுதல்

## ஆலயத்தைத் துப்பரவு செய்தல்

நாம் நமது உடம்பையும் உபயோகிக்கும் பொருட்களையும் சுத்தஞ் செய்து பேணுவது போல எமையும் எமைச் சூழவுள்ள பொருட்களையும் படைத்தருளிய இறைவன் உறையும் இடமாகிய கோயிலையும் துப்பரவு செய்தல் இன்றியமையாத சரியைத் தொண்டாகும். நமது ஊரிலோ பாடசாலையிலோ ஆன்மாக்களுக்கு அருள் செய்தற் பொருட்டு எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருத்தலத்தை துப்பரவு செய்தற்கு மனங்கொள்ளுதலே போதுமானது. அது எமையும் சூழலையும் நன்னிலைக்கு இட்டுச் செல்லும். அந்த வகையில் ஆலயத்தைத் துப்பரவாக வைத்திருப்பதற்கு பின்வரும் திருப்பணிகளை மேற்கொள்ள முடியும்.



- ✮ கோயில் வீதிகளில் இருக்கும் புல் பூண்டுகளைக் களைந்து அசுத்தப் பொருட்களை அகற்றுதல் வேண்டும். திருநாவுக்கரசு நாயனார் இத்தொண்டினை உழவாரம் கொண்டு ஆற்றி முத்திப் பேறடைந்தார்.
- ✮ திருக்கோயிலின் உட்பிரகாரத்தில் கிடக்கும் குப்பை கூளங்களை அகற்றி தூரத்தில் கொண்டு போடுதல் வேண்டும்.
- ✮ அணில், எலி, வௌவால், பூனை, நாய் முதலிய பிராணிகள் இட்டிருக்கும் எச்சங்களை நீக்கி சுத்தஞ் செய்தல் வேண்டும்.
- ✮ தினந்தோறும் கோயிலையும் கோயில் முற்றத்தையும் அலகிடல் வேண்டும். (அலகிடல் - கூட்டுதல்) சூரியன் உதிக்கும் முன் அலகிடல் வேண்டும்.
- ✮ கோயில் மண்டபங்களை தினந்தோறும் அல்லது கிழமைக்கு இரண்டு முறை, அல்லது மூன்று முறை நீரினால் கழுவிச் சுத்தம் செய்தல் வேண்டும். மண் தரையாயின் சாணம் கொண்டு மெழுகிச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.
- ✮ ஆலயத்தில் பயன்படுத்தப்படும் திருவிளக்கு முதலியவற்றை தினந்தோறும் சுத்தப் படுத்தி பேணுதல் வேண்டும்.
- ✮ திருக்கோயில்களில் கிணறு இருப்பின் மாதமொரு முறையாவது இறைத்துச் சுத்தப்படுத்துதல் வேண்டும்.

இத்தொண்டுகளைப் புரிவோர் சைவ ஆசாரம் உடையவராயும் சமய தீட்சை பெற்றவராயும் இருத்தல் நன்று. இத்தொண்டுகளைப் புரியும் போது தோய்ந்துலர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டு, சிவத்தியானத்துடன் திருவைந்தெழுத்தை உச்சரித்தல் வேண்டும். இவ்வாறு திருக்கோயிலைச் சுத்தப்படுத்தி வருவோமாயின், கடவுள் திருவருளை எளிதிற் பெறலாம்.

திருக்கோயில் திருப்பணிகளைப் புரிந்து இறைபதம் அடைந்தோர் பலராவர். அவர்களுள் மிகச் சிறந்தவராக விளங்குபவர் திருநாவுக்கரசு நாயனாராவார். இவர் பாடியருளிய திருவரூர்த் திருத்தாண்டகத்தில் திருக்கோயிலைச் சுத்தம் செய்து வழிபடும் நெறிகளை விளக்கிப் பாடியுள்ளார்.

*நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலும்மெம் பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்*
*பூமாலைப் புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்*
*தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்*
*சங்கரா சயப்போற்றி போற்றி என்றும்*
*அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும்*
*ஆரூரா என்றென்றே அலறா நில்லு''*

**தலவிருட்சம் வைத்தல்**

ஓர் ஆலயத்தின் முக்கிய அம்சங்களில் தலைவிருட்சமும் ஒன்றாகும். பல ஆலயங்கள் தலவிருட்சங்களைக் கொண்டிருக்கின்றன. அவ்வவ் பிரதேசங்களில் செழித்து வளரக் கூடிய தாவரங்கள் தலவிருட்சமாகப் பேணப்படுகின்றன. இத்தல விருட்சங்கள் நோய் தீர்க்கும் காரணியாகவும் விளங்குகின்றன. அதே நேரம் கோயிலுக்கு வரும் பக்த அடியார்களுக்கு நிழல் தரும் விருட்சங்களாகவும் இருக்கின்றன.

**நந்தவனம் அமைத்தல்**

நமது வீட்டைச் சூழ பூந்தோட்டங்கள் அமைத்து அழகுபடுத்தி இருப்பது போல இறைவன் விரும்பி உறையும் இடத்திலும் நந்தவனம் அமைத்து அழகுபடுத்தி தொண்டு புரிதல் வேண்டும். கோயிலுக்குப் பக்கத்தில் திருநந்தவனம் இருத்தல் அவசியமான ஒன்றாகும். நந்தவனம் புனிதமான இடத்தில் அமைத்தல் வேண்டும்.



திருநந்தவனம் என்பதில் திரு என்பது கடவுளுக்குரிய என்றும் நந்தவனம் என்பது பூந்தோட்டம் என்றும் பொருள்படும். அதாவது கடவுளுக்குரிய பூந்தோட்டம் என்பது இதன் பொருளாகும்.

திருநந்தவனத்தை அமைப்பதற்கான முறையை சிவாகமங்கள் சொல்லுகின்றன. நந்தவனம் அமைப்பதற்கான இடம் திருக்கோயிலுக்கு அண்மையில் இருக்கவேண்டியதோடு, தூயமண் கொண்டதாகவும், மலசலம் கழிக்குமிடம், சுடுகாடு ஆகியவற்றிலிருந்து தூரத்திலும் இருத்தல் வேண்டும். திருநந்தவனத்தில் இறைவனின் பூசைக்குகந்த மலர்களை வைத்தல் வேண்டும். குறிப்பாக வில்வம், மந்தாரை, சண்பகம், நெல்லி, வாழை, செவ்விள நீர் முதலிய மரங்களும், அலரி, நந்தியாவர்த்தம், செவ்விரத்தை, துளசி முதலிய செடிகளும், மல்லிகை, முல்லை, இருவாச்சி, பிச்சி, தாளி, வெற்றிலை முதலிய நிலக்கொடிகளும், தாமரை, செழுங்கழுநீர், நீலோற்பலம் முதலிய நீர்க் கொடிகளும் இடம் பெறல் வேண்டும். மழையில்லாத காலங்களில் தினந்தோறும் நீரூற்றுதல் வேண்டும்.

மேற்குறித்த தாவரங்களில் இருந்து பறிக்கப்படும் மலர்களை பின்வருமாறு வகைப்படுத்துவர்.

- ✯ மரங்களில் இருந்து பெறும் மலர்கள் - கோட்டுப் பூ
- ✯ செடிகளில் இருந்து பெறும் மலர்கள் - நிலப் பூ
- ✯ நிலக்கொடிகளில் இருந்து பெறும் மலர்கள் - கொடிப் பூ
- ✯ நீர்க் கொடிகளில் இருந்து பெறம் மலர்கள் - நீர்ப் பூ

எனவும் அழைக்கப்படுகின்றது.

கடவுள் வழிபாட்டுக்குரிய பூக்களை இந்நந்தவனத்தில் இருந்தே கொய்து கொள்ள முடியும். இத்தொண்டினைப் புரிபவரும் சமய தீட்சை பெற்று, ஒழுக்கம் உடையவராய் இருத்தல் வேண்டும். இவ்வாறு கொண்டு வரும் பூக்களை உதிரிகளாகவும் பூசைக்குக் கொடுக்கமுடியும். அல்லது ஓரிடத்தில் இருந்து சிவ சிந்தனையுடன் மாலைகள் தொடுத்து பூசைக்குக் கொடுக்கவும் முடியும். திருநந்தவனப் பூக்களை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தலாகாது.

இவ்வாறு திருநந்தவனம் அமைத்து தொண்டு புரிந்து சிவபதம் அடைந்தவர்கள் பலராவர். திலகவதி அம்மையார், முருக நாயனார், சிவகாமியாண்டார் போன்றோரைச் சிறப்பாகக் குறிப்பிட முடியும்.

## பயிற்சிகள்

1. மனிதப்பிறவியின் நோக்கம் என்ன?
2. சரியைத் தொண்டுகள் 5 எழுதுக.
3. அலகிடுதல் என்றால் என்ன?
4. நந்தவனத்தில் அமைக்க வேண்டிய பூ வகைகளை எழுதுக.
5. நீர் அறிந்த 3 ஆலயங்களின் தலவிருட்சங்களை எழுதுக.

## செயற்பாடு

★ உமது ஊர் அல்லது பாடசாலை ஆலயத்தில் (பாடசாலையில் ஆலயம் இருப்பின்) திருநந்தவனம் ஒன்றை அமைத்துப் பராமரிக்குக.

## பாடச்சுருக்கம்

★ சமயப் பணிகள் செய்வதூடாக எமது வாழ்வை செம்மைப்படுத்திக் கொள்ள முடியும்.

★ அன்பின் துணையோடு உடம்பினால் செய்யும் இறைபணிகள் அனைத்தும் சரியை நெறியாகும்.

★ சரியைத் தொண்டுகள் பல காணப்படுகின்றன.

★ ஆலயத்தைத் துப்புரவு செய்தல் வேண்டும்

★ தலவிருட்சம் வைத்தல் வேண்டும்.

★ திருநந்தவனம் அமைத்து தொண்டு புரிதல் வேண்டும்.